மெட்ரோ ரயில் பணிகள் நிறைவு

# வடபழனி, அசோக் பில்லர் வழியாக அரசு விரைவு பேருந்துகள் மீண்டும் இயக்கம்

■ சென்னை

சென்னையில் மெட்ரோ ரயில் பணிகள் நிறைவடைந்துள்ளதால் அரசு விரைவு பேருந்துகள் வடபழனி, அசோக் பில்லர், ஆலந்தூர் வழியாக மீண்டும் இயக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை கோயம்பேட்டில் இருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, நாகர்கோவில், தூத்துக்குடி, சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், தஞ்சாவூர் உட்பட பல்வேறு இடங்களுக்கு தினமும் விரைவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பேருந்துகள் அனைத்தும் கோயம்பேட்டில் இருந்து வடபழனி, அசோக்பில்லர், ஆலந்தூர், குரோம்பேட்டை மற்றும் தாம்பரம் வழியாக ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்தன. இதற்கிடையே, சென்னையில் முக்கிய சாலைகளில் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் பல்வேறு கட்டமாக நடைபெற்றன. இதனால், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் மதுரவாயல் புறவழிச் சாலை வழியாக இயக்கப்பட்டு வந்தன.

இதற்கிடையே, தற்போது மெட்ரோ ரயில் பணிகள் நிறைவடைந்துள்ளதால் அரசு விரைவுப் பேருந்துகள் (பிரிமியம் மற்றும் ஹைவே ரைடர் பேருந்துகள் தவிர்த்து) மீண்டும் காலை 10 மணி முதல் மாலை 4.30 வரையிலும், இரவு 09.30 மணி முதல் காலை 7.00 வரையிலும், கோயம்பேட்டில் (எம்ஜிஆர் பேருந்து நிலையம்) இருந்து வடபழனி, அசோக் பில்லர், ஆலந்தூர், குரோம்பேட்டை மற்றும் தாம்பரம் வழியாக இயக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து பயணம் செல்வதற்கும் மற்றும் வந்தடைவதற்கும் இணையதளம் மூலமாக பயணிகள் முன்பதிவு செய்து பயணம் செய்திட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.